செ.வெ.எண் : 13/ ஜூலை நாள் : 07.07.2017

**இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள**

**அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் "வாக்காளர் சிறப்பு முகாம்" வருகின்ற 09.07.2017 அன்று நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் "வாக்காளர் சிறப்பு முகாம்" நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, ஜூலை 1-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை 18 முதல் 21 வயது நிரம்பியவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக 09.07.2017 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் "வாக்காளர் சிறப்பு முகாம்" நடைபெறவுள்ளது. சிறப்பு முகாம் நடைபெறும் அன்று அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நிரப்பப்பட்ட படிவங்களைப் பெறுவார்கள்.

எனவே இளம் வாக்காளர்கள் அனைவரும் தீவிர வாக்காளர் சேர்க்கை மற்றும் சிறப்பு முகாம்களைப் பயன்படுத்தி தங்களை புதிய வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் இணைத்து கொள்ளலாம்.

இந்த சிறப்பு முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**